[1979 ஏப்ரல் 21

*வினா எண் 772— திரு செ. சிவசாமி: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் சர்க்கரை சத்து 8·5% இருக்கும் கரும்புக்கு டன் 1-க்கு ரூ.100 கொடுக்க மத்திய அரசு ஒத்துக் கொண்டுள்ளவாறு கரும்பு விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது?

(ஆ) $4\frac{1}{2}$ கோடி பழைய பாக்கியையும் வசூல் செய்து கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ)&(ஆ): அவையின் முன் அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

கரும்பு பயிரிடல்

*வினா எண் 773— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ் நாட்டில் கரும்பு பயிரிடும் பரப்பளவை குறைக்குமாறு மத்திய அரசு மாநில அரசுக்கு அண்மையில் யோசனை கூறி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:

(அ) பத்திரிகைச் செய்தி தவிர வேறு இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, இந்தச் சர்க்கரைச் சத்து 8.5 என்று கணக்கிடுகின்ற நேரத்தில் சர்க்கரை ஆலைகளில் பல தவறுகள் நடப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதைக் கண்காணிக்க அரசு தனியாக ஒரு அதிகாரியை நியமித்து அதைச் சரியான முறையிலே கணக்கிடத் தகுந்த திட்டங்களை வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் திறன் என்று சொல்லப்படுகின்ற அந்த சுகர் ரிக்கவரித் தன்மை ஒவ்வொரு ஆலைக்கும் ஒவ்வொரு விதமாக வந்து கொண்டிருக்கிறது என்று விவசாயப் பெருங்குடி மக்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவை நடவடிக்கைகளின் மூலமாக சீர் செய்யப்படும்.

---

*1062-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 ஏப்ரல் 21]

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இங்கே கொடுக்கப் பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் வங்கிகள் அளிக்கின்ற பணமாகிய சராசரி 153 ரூபாய் ஆலைகளுக்கு அளிக்கப்படாததன் காரணமாக அந்த ஆலைகள் விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கித் தொகையாகிய $4\frac{1}{2}$ கோடி ரூபாயை கொடுக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. வங்கியில் கொடுக்கப்படவில்லை என்பதற்காக அவர்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை என்றால் பிறகு விவசாயிகள் எப்படி உரத்திற்குரிய விலையைக் கொடுப்பார்கள், எப்படி அவர்களிடம் வேலை செய்யக்கூடிய ஆட்களுக்குச் சம்பளம் கொடுப்பார்கள்? ஆகவே வங்கிகள் கொடுக்கவில்லை என்ற சாக்குபோக்கு எல்லாம் சொல்லாமல் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையை உடனடியாகக் கொடுத்துத்தான் ஆக வேண்டும், ஆகவே அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கம் ஆலைகளுக்குச் சொல்ல வேண்டும். இல்லை என்றால் அந்த ஆலைகளை அரசாங்கமே ஏற்று நடத்தக்கூடிய அளவில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட வேண்டிய பாக்கி $4\frac{1}{2}$ கோடி ரூபாய் அல்ல. 68 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த பாக்கி ஏற்பட்டதனுடைய காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். மத்திய அரசினுடைய சர்க்கரைக் கொள்கையின் காரணமாகத் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாகக் கட்டுப்பாட்டை நீக்கியதன் காரணமாக சர்க்கரை உற்பத்தி அதிகமாகிவிட்ட காரணத்தால் இவ்வாறு விலை குறைக்கப்பட்டது. அதனால்தான் மார்க்கெட்டிலே நம்முடைய சர்க்கரைக்கு நல்ல விலை கிடைக்காமல் போனதால் இங்கே சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய 20 ஆலைகள் நஷ்டத்தில் ஓட வேண்டிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை சீர்படுத்தப்பட வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலைமையைச் சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தந்த ஆலை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்குமே ஒழிய, கொடுக்கக் கூடாது என்பதல்ல. அதன் காரணமாகத் தான் காவிரி சுகர் மில்ஸ்-ல் பாக்கிக் கொடுக்க முடியாமல், நடவடிக்கை எடுக்கப்பட்டு, அங்கே ஒரு ரிசிவர் அப்பாயின்ட் செய்யப்பட்டிருக்கிறார். அருணா சர்க்கரை ஆலையிலும் அந்த நிலைமை ஏற்படக் கூடாது என்பதன் காரணமாக அந்த ஆலை பாக்கியைக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். நிலைமை இப்போது முன்னேறிக் கொண்டு வருகிறது.

[1979 ஏப்ரல் 21

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது 8.5 சதவிகிதத்திற்கு 1978-79-ம் ஆண்டில் ரூ. 100 கொடுக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள், எந்தெந்த சதவிகிதத்திற்கு எவ்வளவு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சுகர் ரெகவரி பேசிஸ்-ல் குறைந்தபட்சம் 8.5 சதவிகிதம் என்று வைத்திருக்கிறோம். அதற்குக் குறையாது உள்ள 8.5 சதவிகிதத்தைக் கருத்தில் வைத்து ரூபாய் 100 என்று 1978-79-ம் ஆண்டில் அறுவடை சீசனில் மத்திய அரசு நமக்கு விலை கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கரும்பு உற்பத்தியாகும் பரப்பளவு எவ்வளவோ குறைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சங்கடத்தை நிவர்த்திக்க இந்த அரசு மத்திய அரசை ஏதாவது கேட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-8-78-ல் டில்லியில் நுகர்வோர் சங்கங்களின் ஒருமித்த கழகக் கூட்டத்திற்கு பல மாநிலங்களிலிருந்து வந்தவர்கள் தங்கள் கருத்தைக் கூறினார்கள். அப்படிப் பேசும்போது அங்கே இருக்கின்ற அமைச்சர் அவர்கள் இது போன்ற விவரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று கரும்பு உற்பத்தி செய்கின்ற நிலங்களின் விஸ்தீரணத்தைக் குறைக்கலாம் என்றக் கருத்தையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் உடனடியாகக் குறைத்து விட முடியாது என்கின்ற நிலைமையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கரும்புக்கு 8.5 சதவிகிதத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும் குறைந்த விலை கட்டுப்படியாகாது, ரூ. 125 கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குத் தேவையான உரம், கருவிகள், உற்பத்திச் சாதனங்கள் ஆகியவற்றின் விலை ஏறி இருக்கிற காரணத்தால் கரும்பிலிருந்து தயார் செய்கின்ற வெல்லத்தின் விலையும் குறைந்திருக்கிற காரணத்தால் அந்த விவசாயிகள் தொடர்ந்து தங்கள் தொழிலைச் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுவதால் கரும்புக்கு விலை ரூ. 125 என்பதற்குப் பதிலாக, ரூபாய் 150 ஏன் உயர்த்தி தரக் கூடாது என்று மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொண்டு வருகின்ற 125 ரூபாயை அவர்கள் கொடுக்கவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் 150 ரூபாய் கேட்டால் அவர்கள் கொடுப்பார்களா என்ற சூழ்நிலைகளை யெல்லாம் நான் யோசித்துப் பார்க்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, டன் ஒன்றுக்கு 125 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். ஆனால் 100 ரூபாய் கூடக் கொடுக்காமல் மதுராந்தகத்திலும், வேலூரி லும் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆக அந்தக் குறைந்தபட்ச 100 ரூபாயாவது கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் சர்க்கரை ஆலையில் ரூ. 112.90 என்று விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வேலூரில் ரூ. 108.20 என்று விலை குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் குறைவாகக் கொடுத்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த இரண்டு ஆலைகளிலும் குறிப்பிட்ட விலை நிர்ணயித் திருந்தாலும், விவசாயிகளுக்கு அந்த விலையை கொடுப்ப தில்லை. இது விவசாயிகளுக்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது. ஏனென்று சொன்னால் நிர்ணயித்த விலையைக் கொடுக்காமல் ஒரு பகுதியை பிடித்துவிட்டு மீதியைத்தான் கொடுக்கிறார்கள். ஆகவே அரசு இதைக் கவனித்து முழு விலையையும் கொடுக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சர்க்கரைக்குப் போதிய விலை இல்லாததால் ஆலையில் முழுத் தொகையையும் கொடுக்க முடியாமல் இருக்கும். கொடுக்கவில்லை என்று சொன்னால் கோடிட்டு இனிமேல் கொடுக்கப் போவதில்லை என்று சொல்லுவதில்லை. பாதியைக் கொடுத்திருந்தாலும் பார்ட் பில்லாகக் கொடுத்திருப்பார்கள், நிலுவையிலுள்ள தொகையை பின்னால் பங்குதாரர்களுக்குக் கொடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு. ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]